# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter




## குருதீபம்
## Gurutheepam


செப்ரெம்பர் - 2022 இதழ் - 41




## பீடாதிபதியின் செய்தி

குருதீபம் 41வது இதழுக்குச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். குருதீபம் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பல்வேறு செயற்பாடுகள் தொடர்பான செய்திகளை நாடளாவிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் கொண்டு சென்று சேர்ப்பதில் மிகப்பெரும் பங்காற்றுகின்றமை மிக்க மகிழ்ச்சியளிக்கிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் ஒவ்வொரு மக்களின் வாழ்க்கையிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அடிப்படைத் தேவை-களை நிறைவேற்றுவதற்குக் கூட நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் போராடி வருகின்றனர். எமது நாட்டைப் பொறுத்த வரை பெரும்பாலான ஆசிரியர்கள் நடுத்தர வர்க்க வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர். ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய அதே நேரம், தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. அந்த வகையில் எமது பிரதேசங்களில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்படுவது மிக்க மகிழ்ச்சியளிக்கின்றது.

காலத்திற்கு ஏற்ற வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் சமூகத்தினால் பல்வேறு பயன் மிக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எமது கல்லூரியின் பணியாளர்களினாலும் மாணவ ஆசிரியர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட மரக்கறிப் பயிர்ச் செய்கையானது இப்போது அறுவடையைத் தரும் நிலையை அடைந்துள்ளது. 'சிறு துளி பெரு வெள்ளம்' என்ற ஆன்றோர் வாக்குக்கு அமைய இச்செயற் பாடுகள் இன்னும் பரவலாக்கப்பட வேண்டும்.

தமது கற்பித்தல் பயிற்சியின் முதலாம் கட்டத்துக்காக முதலாம் வருட மாணவ ஆசிரியர்கள் 29.08.2022 தொடக்கம் செல்கின்றனர். கற்பித்தல் பயிற்சி வெற்றி கரமாக நடைபெற வேண்டும் என்ற உத்வேகத்துடன் ஒவ்வொரு ஆசிரிய கல்வியியலாளர்களும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தமை உண்மையிலேயே பாராட்டுக்குரியது. கல்லூரியிலும், கல்லூரிக்கு வெளியே பாடசாலைகளிலும் பல்வேறு பயிற்சிகளில் எமது மாணவ ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அதன் பலா பலன்களை மாணவர்களின் கற்பித்தல் பயிற்சிகளின் போது அவதானிக்க முடிகின்றது. சம்மந்தப்பட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.மகாலிங்கம் நிரேஸ்குமாரின் ஒருங்கிணைப்பில், ICT புத்தாக்கப் போட்டிக்காக மாணவ ஆசிரியர்களைத் தயார்படுத்தும் பயிற்சிப் பட்டறைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதுடன் இறுதிப் போட்டிக்காக மாணவ ஆசிரியர்கள் தமது ஆக்கங்களைச் சமர்ப்பித் துள்ளனர். போட்டியில் பங்கு பற்றிய மாணவ ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இப்பயிற்சிப் பட்டறைகளை நடத்திய கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு மாணவர்களாகிய செல்வன் வி.விக்னகஜன், செல்வன். ப.நிந்துகேஷன் ஆகியோருக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தின் சார்பிலும், கல்லூரியின் பீடாதிபதி என்ற வகையிலும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.பொ.விஜயகுமாரனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மாணவ ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல் செயலமர்வு வெற்றிகரமான செயற்பாடாக அமைந்தது. உள்ளகப் பயிற்சி மாணவ ஆசியர்களினால் இம்முறை பாடசாலைகளில் பல வியத்தகு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கல்லூரியின் பீடாதிபதி என்ற வகையிலும் தனிப்பட்ட வகையிலும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்... நன்றி.

**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**


This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd September 2022

### போசகர்

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

### ஆலோசகர்கள்

செல்வி.செ.செல்வமலர்
திரு.தி.ஜெயகாண்டீபன்
உப பீடாதிபதிகள்

### பிரதம ஆசிரியர்

திரு.ம.நிரேஸ்குமார்

### இணை ஆசிரியர்கள்

திரு.சி.முகுந்தன்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

### வெளியீடு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk

**கல்லூரி வளாகத்தில் இடைநிறுத்தப்பட்ட கட்டட வேலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரை யாடலில் பிரதம பொறியியலாளர் உள்ளிட்ட குழுவினர்**



**"புரிந்துணர்வு" என்னும் தொனிப்பொருளில் மாணவ ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வு**













This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd September 2022

## அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சைவசமய அறிவுப் போட்டியில் நடுவர்களாகப் பணியாற்றிய மாணவ ஆசிரியர்களுக்கான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட தருணம்









## சித்திரத் துறையினரால் நடத்தப்படும் 'மௌனமொழி' கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ ஆசிரியர்களுக்கான பரிசில்கள்









This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd September 2022

## கலைமாமணி வீரமணிஐயர் ஞாபகார்த்த நினைவுப் பேருரை - 23.08.2022











## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி.தி.கமலநாதன் அவர்களின் “சிந்தனை, சொல், செயல்” நூல் வெளியீடு - 23.08.2022









This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd September 2022

## பல்வேறு கற்பித்தல் பயிற்சி வகுப்புக்களில் ஈடுபட்டிருக்கும் எமது மாணவ ஆசிரியர்கள்











## பாடசாலைகளில் கற்பித்தல் பயிற்சியில் எமது மாணவ ஆசிரியர்கள்











This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd September 2022

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால் முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு இயற்கையை வளப்படுத்தும் செயற்பாடுகளும் விவசாய நடவடிக்கைகளும்...**

















This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd September 2022

**கல்லூரியையும் கல்லூரிச் சுற்றாடலையும் அழகு படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் எமது கல்வி சாராப் பணியாளர்களும் மாணவ ஆசிரியர்களும்...**























This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd September 2022

## National Level ICT Championship Competition - 2022
## போட்டியில் பங்கு பற்றும் மாணவ ஆசிரியர்களுக்கான செயலமர்வுத் தொடர்கள்








National Level ICT Championship Competition - 2022 போட்டிக்காக மாணவ ஆசிரியர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு செயலமர்வுகள் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப மன்றத்தினால் ஒழுங்கு படுத்தி நடத்தப்பட்டன.

கொழும்புப் பல்கலைக் கழக மாணவர்களான செல்வன் வி.விக்னகஜன் மற்றும் செல்வன்.ப.நிந்துகேசன் ஆகியோர் இச்செயலமர்வுகளைச் சிறப்பாக நடத்தினர்.


14 மாணவ ஆசிரியர்கள் இறுதிப் போட்டிக்காகத் தமது ஆக்கங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

## Electronic Workshop at Jaffna Central College 11.08.2022






## Real Science Teaching Learning ractice from Nearest Schools - 02.08.2022



## அறிவாகி நிஜமாகி தொடர் நிகழ்ச்சிகள்








## Blended Learning Manual Presentation
## 06.08.2022




## Hand to Hand Model Class
## 06.08.2022




## தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப மாணவ ஆசிரியர்களின் மாதிரிக் கற்பித்தல் வகுப்புக்கள்




சகபாடிக் கற்பித்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்பித்தல் உட்பட நிகழ்நேர முறையில் 17 மாதிரிக் கற்பித்தல் வகுப்புக்கள் மாணவ ஆசிரியர்களினால் முன்னெடுக்கப்பட்டன.

## தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப மாணவ ஆசிரியர்களின் முன்வைப்புத் தொடர்கள்




விடுமுறை காலத்தில் மாணவ ஆசிரியர்களினால் 21 முன்வைப்புக்கள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப் பட்டன.

## நேரடி அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப மாணவ ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட்ட கற்பித்தல் பயிற்சி வகுப்புக்கள்




## முழு நிலா கலையரங்கு - 11.08.2022




This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd September 2022

## குருசேத்திரம் குழுமத்தினால் நடத்தப்படும் வாராந்த அறிவுப் பகிர்வுத் தொடர் நிகழ்ச்சிகள்













### உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களுக்கான நிதி உதவிகள்...

பதினைந்து உள்ளகப் பயிற்சி மாணவஆசிரியர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் பயிற்சி தேவைகளை மேலும் மெருகூட்டி வளம் சேர்க்கும் வகையில் மாதாந்தம் 3000 ரூபாய் வீதம் 08 மாதங்களுக்கு நிதி உதவி வழங்க சுவிஸ் நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகளான திரு.சிவசுப்ரமணியம் சிவனாமன் அவர்கள் முன் வந்து உதவி வழங்கியுள்ளார். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.